15th November 1957]

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் தயாரித்த இந்த படத்தில் தென்னிந்திய தலைவர்களை சேர்க்காதது வேண்டுமென்றே (டெலிபிரேட்) செய்தார்களா அல்லது தற்செயலாக செய்தார்களா என்பதை கண்டுபிடிப்பதற்கு இந்த சர்க்கார் என்ன முயற்சி செய்தார்கள் என்பதை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் ஒரு தப்பபிப்பிராயம் இருந்து வருகிறது. இதை மத்திய சர்க்கார் தயாரிக்கவில்லை. இந்த நூற்றாண்டு விழாவை நடத்துவதற்கென்று ஒரு தனி கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது. அந்த கமிட்டியின் மூலம் சர்க்காரின் செலவில் இந்த படம் தயாரிக்கப்பட்டது. பின்னால் இந்த குறையை எடுத்துக்காட்டிய போது அந்த படத்தை வாபஸ் பெற்றார்கள்.

SRI K. ANBAZHAGAN : இந்த நூற்றாண்டு விழாவை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஆலோசனை குழுவில் பண்டித நேரு அவர்களும் இருந்தார்கள் என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா ? அதுபோல அந்த படத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்களை ஒதுக்கியிருப்பதால், இந்த அரசாங்கம் தனியாக ஒரு படம் தயாரித்து வெளியிட முன் வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது நூற்றாண்டு விழாவை ஒட்டி எடுக்கப்பட்ட படம். இங்கு வேறு விதமாக வேறு அவசியத்திற்காக படம் எடுக்கவேண்டும் என்று அவசியம் ஏற்பட்டால் அப்போது படம் எடுப்பதற்கு ஆலோசிக்கலாம்.

Cheris affected by Mettur water in Bhavani taluk

* 195 *Q.*—**SRI P. G. MANICKAM** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cheris affected by the flow of the Mettur Right Bank Canal water in the low level areas of the Bhavani taluk, Coimbatore district, with the number of houses in each; and

(*b*) the relief measures adopted during the past three years?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The answer is as under :—

Serial number.	Name of villages.	Number of Harijan colonies affected by the flow of water.	Number of houses affected in each.
1	Periakurumapalayam, hamlet of Kalbavi.	1	35
2	Periandipalayam, hamlet of Kurichi.	1	47
3	Manickampalayam, hamlet of Kurichi.	1	78
4	Kurichi village	1	97
5	Norinjipet village	1	103
6	Ariagoundanur, hamlet of Nerinjipet.	1	45
7	Umareddiyur, hamlet of Ammapet.	1	61
8	Ammapet . ..	1	108
9	Molagoundanpudur, hamlet of Bhavani.	1	47
		9	621

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[15th November 1957

(b) The Collector of Coimbatore has reported that the Revenue Divisional Officer, Gobichettipalayam, has submitted proposals for acquiring alternative sites for rehabilitating the persons whose families have been affected by seepage from the Mettur Right Bank Canal in respect of all the nine colonies, and the matter is under his consideration.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, கடந்த மூன்று வருடங்களாக இந்த ஹரிஜனங்கள் அங்கு நரகத்தில் வசிக்கிற மாதிரி குடிகொண்டிருக்கிறார்கள். சேரிகளில் எல்லாம் தண்ணீர் தேங்கிக்கிடக்கிறது. இம்மாதிரி நரகத்தில வாழுகிறமாதிரி அவர்கள் . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் இம்மாதிரி கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. நேரடியாக கேள்வியை மாத்திரம் கேட்க வேண்டும்.

SRI P. G. MANICKAM : ஆகவே இவர்களுக்கு நிவாரணம் அளிக்க இந்த சர்க்கார் உடனே வேண்டிய நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : உலகத்தில் தண்ணீரினால் கெடுதியும் ஏற்படுகிறது, நன்மையும் ஏற்படுகிறது. இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI G. G. GURUMURTHI : இந்த வாய்க்காலினால் அந்த பிரதேசத்திலுள்ள பிற்பட்ட ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை ஒட்டி கஷ்டப்படுகிறவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும்.

Workers' participation in the managements

* 196 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the industries, in the private sector, in which workers' participation in the management is to be tried?

THE HON. SRI R. VENKATARAMAN : The Scheme of workers' participation in management has been inaugurated in the Engineering and Press Groups of the Simpson and Group Companies only as an experimental measure to begin with.

SRI K. SATTANATHA KARAYALAR : Is there any proposal to extent it to the Transport Industry ?

THE HON. SRI R. VENKATARAMAN : This has already been put into operation in the Government Coach Building Factory at Madras.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் உரிமை தொழிலாளர்களுக்கு கொடுக்கும்படியான இந்த திட்டத்தில் சாதாரணமாக பாக்டரி ஆக்டில் உள்ளது போல வொர்க்ஸ் கமிட்டி அங்கீகாரம் அளித்து சலுகை அளிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வேலைகளில் உள்ள மாற்றங்கள் செய்வதற்கு வொர்க்ஸ் கமிட்டியில் கலந்து ஆலோசிக்க வேண்டியதில்லை. ஆனால் நிர்வாகக் குழுவைக் கலந்து ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. இரண்டாவதாக வொர்க்ஸ் கமிட்டிக்கு வரவு செலவுகள் விசாரணையில் ஈடுபடுவதற்கு அதிகாரம் இல்லை. நிர்வாக குழுவுக்கு அந்த அதிகாரம் உண்டு. இன்னும் பல வித்தியாசங்களும் இருக்கின்றன.